# கொளத்தூர் தொகுதியில் நலத்திட்ட உதவிகள் - முதல்வர் வழங்கினார்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த மூத்தக் குடிமக்கள் உறைவிடங்களில் வரவேற்பறை, குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள், உணவருந்தும் அறை, பல்நோக்கு அறை, சமயலறை, பார்வையாளர்கள் அறை, நூலகம், அவசர ஊர்தியுடன் கூடிய மருத்துவ மையம், நடைபாதை வசதிகளுடன் கூடிய சிறு பூங்கா, பாதுகாக்கப்பட்ட குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து, திருவான்மியூர், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயிலுக்கு ஓதுவார் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பார்வை திறனற்ற மாற்றுத்திறனாளி செல்வி எஸ்.எஸ்.பிரியவதனாவிற்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணையினை வழங்கினார். அப்போது செல்வி பிரியவதனா பணி நியமன ஆணை வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

**அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் மடிக்கணினிகள், பயனாளிகளுக்கு கண்ணாடிகள் வழங்குதல்!**

அதனைத் தொடர்ந்து, ஜி.கே.எம். காலனி பிரதான சாலை, அரிச்சந்திரா மைதானத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 350 மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

கொளத்தூர், ஜவகர் நகரில் உள்ள கலைஞர் நூற்றாண்டு கண் சிகிச்சை மையத்தில் பரிசோதனை மேற்கொண்டவர்களில் 100 பயனாளிகளுக்கு இலவசமாக கண்ணாடிகளை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வழங்கினார்.

**மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்கா திறந்து வைத்தல்!**

தொடர்ந்து, ஜி.கே.எம். காலனி 24A தெருவில், சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் 2 கோடியே 89 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஜெனரல் குமாரமங்கலம் குளத்தினை ஆழப்படுத்தி, புதிதாக குளக்கரை, நடைபாதை, சுற்றுச்சுவர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் இறகுப்பந்தாட்ட விளையாட்டுத்திடல், யோகா மேடை, செயற்கை நீரருவி, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்களுடன் மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களையும் வழங்குதல்!**

பின்னர், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த 318 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்து, புத்தகப் பை, புத்தகங்கள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர் 4வது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் திறந்து வைத்தல்!**

குமரன் நகர் 80 அடி சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பருவமழை காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்க கொளத்தூர் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாச்சலம் நகர் உபரிநீர் கால்வாயினை 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற திறந்தவெளி கால்வாய் மற்றும் மூடிய வடிவிலான கால்வாயாக மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாயை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த கால்வாயினை திறந்தவெளியாகவும், மூடிய வடிவிலும் அகலப்படுத்தி விநாடிக்கு 1000 கன அடி உபரிநீர் செல்லும் வகையில் புதிய கான்கிரீட் கால்வாயாக அமைக்கப்பட்டு உள்ளது. இப்பணியினால் யுனைடெட் காலனி, செல்வம் நகர், சிவானந்தா நகர், ராமலிங்கா நகர், நாகாத்தம்மன் கோயில் பகுதி, குமரன் நகர் மற்றும் சந்திர பிரபு காலனி ஆகிய பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

இத்திட்டத்தில் இணை கால்வாய்களையும் சேர்த்து மூடிய வடிவிலான புதிய கான்கிரீட் கால்வாய் 2170 மீட்டரும், திறந்தவெளி கான்கிரீட் கால்வாய் மற்றும் கம்பி வேலி 1130 மீட்டரும், வெள்ள தடுப்பு சுவர் 70 மீட்டரும் மற்றும் கால்வாயின் மீது புதிதாக 9 சிறு பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், எஸ். சுதர்சனம்,

துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன்,

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே,

பெரியார் அரசு மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கே. ஹேமலதா, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




லண்டன் ஹைகேட்டில் அமைந்துள்ள பொருளாதார அறிஞரும், வரலாற்றாசிரியரும், சமூகவியலாளரும், அரசியல் கோட்பாட்டாளரும், பத்திரிகையாளரும், அரசியல் பொருளாதாரத் திறனாய்வாளரும், சோசலிசப் புரட்சியாளருமான கார்ல் மார்க்ஸ் அவர்களின் கல்லறை அமைந்திருக்கும் இடத்திற்கு தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சென்று அன்னாரது சிலைக்கு மரியாதை செலுத்தினார். உடன் லண்டன் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் செந்தில், மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு ஆகியோர் உள்ளனர்.

### அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு!

# மாணவர்கள் நலன் கருதி மீண்டும் மே 30-ஆம் தேதி தொடங்கும்!

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்!



சென்னை, மே 29-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு 7.05.2025 அன்று தொடங்கியது, நேற்று முன்தினம் (27.05.2025) முடிவடைந்ததால் மாணவர்களின் நலன் கருதி மீண்டும் 30.05.2025 அன்று தொடங்கும் என உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:-

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2025-26ம் கல்வியாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 07.05.2025 அன்று முதல் 27.05.2025 வரை, www.tngasa.in என்ற இணையதள வாயிலாக பெறப்பட்டது. இதுவரை 2,25,705 விண்ணப்பங்கள் இணைய தளம் வாயிலாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,08,619 மாணவிகள், 76,065 மாணவர்கள் மற்றும் 78 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 1,84,762 மாணாக்கர்கள் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

சிறப்புப் பிரிவு மாணாக்கர்களுக்கான தரவரிசைப் பட்டியல் 29.05.2025 அன்று கல்லூரிகளில் வெளியிட ப்படும்.

29.05.2025- சிறப்புப் பிரிவு மாணாக்கர்களுக்கான தர வரிசைப் பட்டியல் கல்லூரிகளின் இணைய தளங்களிலும், கல்லூரி தகவல் பலகைகளிலும் வெளியிடப்படும்.

30.05.2025 - பொதுப்பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் கல்லூரிகளின் இணைய தளங்களிலும், கல்லூரி தகவல் பலகைகளிலும் வெளி யிடப்படும்.

02.06.2025 மற்றும் 03.06.2025 - சிறப்பு ஒதுக்கீட்டுப் பிரிவு மாணாக்கர்களுக்கான கலந்தாய்வு (மாற்றுத் திறனாளிகள் / விளையாட்டு வீரர்கள் / முன்னாள் இராணுவத்தினர் / அந்தமான், நிகோபார் தமிழ் மாணாக்கர்கள் / தேசிய மாணவர் படை/ பாதுகாப்புப் படைவீரர்கள்)

04.06.2025 முதல் பொதுக் கலந்தாய்வு

14.06.2025 வரை- தொடர் கலந்தாய்வு மற்றும் மாணாக்கர் சேர்க்கை

30.06.2025- முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் துவங்கும் நாள்

இவ்வாறு உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

(பொதுப்பிரிவினருக்கான தரவரிசைப் பட்டியல் 30.05.2025 அன்று கல்லூரிகளில் வெளியிடப்படும். கல்லூரித் தகவல் பலகைகளில் தரவரிசைப் பட்டியல்கள் ஒட்டப்பட்டு, கல்லூரி இணைய தளங்களிலும் வெளியிடப்படும். மேலும், 176 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் சிறப்பு ஒதுக்கீட்டுப் பிரிவு மற்றும் பொது கலந்தாய்விற்கான தகவல்கள், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக மாணாக்கர்களுக்கு அந்தந்த கல்லூரிகளிலிருந்து தெரிவிக்கப்படும்.

27.05.2025ம் தேதிக்குள் விண்ணப்பிக்கத் தவறிய மாணாக்கர்கள் மற்றும் துணைத் தேர்வு எழுதும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் மீண்டும் 30.05.2025 அன்று முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு வகுப்புகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு 30.06.2025 இல் துவங்கும்)

### உலகளாவிய பயங்கரவாதத்திற்குஎதிராக

# ஸ்லோவேனியா நாடு இந்தியாவோடு நிற்கிறது!

## லுப்லியானாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**லுப்லியானா, மே 29 -**

**ஸ்லோவேனியா தலைநகர் லுப்லியானாவில் இந்தியாவின் சார்பில் சென்றுள்ள நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டியளிக்கும் போது, “உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிராக ஸ்லோவேனியா நாடும் இந்தியாவோடு நிற்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.**

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்து சர்வதேச நாடுகளுக்குத் தெளிவாக விளக்குவதற்காக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கும் பயணித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்து வருகின்றன.

அதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் ஒரு எம்.பி.க்கள் குழுவினர் லுப்லியானாவிற்கு சென்றுள்ளனர். திங்களன்று (26.5.2025) ஸ்லோவேனியா தலைநகர் லுப்லியானாவுக்கு சென்ற கனிமொழி கருணாநிதி தலைமையிலான அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழு, பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்ளிட்டவை பற்றி ஸ்லோவேனியா நாட்டு அரசு பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தனர்.



மேலும், ஸ்லோவேனியா நாடாளுமன்ற வெளிநாட்டுக் கொள்கை குழுத் தலைவரான பிரெட்ராக் பாகோவிச் மற்றும் இந்தியா - ஸ்லோவேனியா நாடாளுமன்ற நட்புறவு குழுவின் உறுப்பினர் மிரோஸ்லாவ் கிரெகோரிச் ஆகியோரை எம்.பி.க்கள் குழுவினர் சந்தித்து விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டனர். அந்த சந்திப்பின்போது, பஹல்காம் தாக்குதல் குறித்தும், ஆபரேஷன் சிந்தூர் குறித்தும் இந்திய எம்.பி.க்கள் குழுவினர் விரிவாக விளக்கங்களை அளித்தனர்.

மேலும், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான மற்றும் சகிப்புத்தன்மை இல்லாத நிலைப்பாடு, போன்ற விஷயங்களை நாட்டின் ஒருமித்த கருத்தாகத் தெரிவித்தனர்.

பிறகு செய்தியாளர்களைச் சந்தித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறியதாவது,

ஸ்லோவேனியா நாடு மிகவும் வலுவான ஆதரவாளராக உள்ளனர். அவர்கள் எப்போதும் அமைதியை ஆதரித்து வருகின்றனர், மேலும் பயங்கரவாத செயல்களுக்கு எதிராக எப்போதும் நிற்கிறார்கள். உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிராக ஸ்லோவேனியா எங்களுடன் நிற்கும் என்ற நேர்மறையான உணர்வுடன் நாங்கள் திரும்பிச் செல்கிறோம். மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் (UNSC) இந்தியா எதிர்பார்ப்புகளைப் பற்றிய விவாதங்கள் நடைபெறும் போது, அவர்கள் இந்தியாவுடன் நிற்பார்கள் என்பதிலும் நம்பிக்கை இருக்கிறது.

நாங்கள் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறோம். பொறுப்புணர்வு இல்லாமல், பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று இந்த முரண்பாட்டைத் தீர்க்க முடியாது. பயங்கரவாதத்தை ஆதரிக்கும் ஒரு நாட்டுக்கும், இந்தச் செயல்களைச் செய்பவர்களுக்கும் இடையில் எங்களால் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

இன்று, நாங்கள் சந்திக்கும் போது, இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதைக் குறைந்தபட்சம் அவர்கள் அறிவார்கள். ஆனால் ஒரு பிரதிநிதிகள் குழு வந்து அவர்களிடம் உண்மைகளை முன்வைக்கும்போது, நாம் என்ன அனுபவிக்கிறோம் என்பதைப் பற்றி ஆழமாக புரிந்துகொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

# தமிழ்நாட்டில் ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல்!

## இந்திய தேர்தல் ஆணையம் அட்டவணை வெளியீடு!

புதுடெல்லி, மே 29-

தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 24.07.2025 முடிவடைவதைத் தொடர்ந்து ஏற்படும் காலி இடங்களை நிரப்புவதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் தேர்தல் கால அட்டவணையை வெளியிட்டுள்ளது:

தேர்தல் அறிவிக்கையை வெளியிடும் நாள் மற்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான ஆரம்ப நாள்: 2.6.2025 (திங்கட்கிழமை),

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்: 09.06.2025 (திங்கட்கிழமை),

வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் நாள் : 10.6.2025 (செவ்வாய்க்கிழமை),

வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்: 12.6.2025 (வியாழக்கிழமை),

வாக்குப் பதிவு நாள்: 19.6.2025 (வியாழக்கிழமை),

வாக்குப் பதிவு நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை,

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள்: 19.6.2025 (வியாழக்கிழமை) மாலை 5 மணி முதல்,

தேர்தல் நடவடிக்கைகள் முடிவுறும் நாள்: 23.6.2025 (திங்கட்கிழமை).

இந்தியத் தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் கூடுதல் செயலாளரை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் இணைச்செயலாளரை உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும் நியமனம் செய்துள்ளது. வேட்பு மனுக்களை பிற ஆவணங்களுடன் தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி முன்போ தலைமைச் செயலகத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 02.06.2025 முதல் 09.06.2025 வரை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, 1881ஆம் வருட செலாவணி முறிச் சட்டத்தின்கீழ் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ள 07.06.2025 (பக்ரீத் பண்டிகை) மற்றும் 08.06.2025 (ஞாயிற்றுக்கிழமை) தவிர, பிற நாட்களில் தாக்கல் செய்யலாம். வாக்குப் பதிவு, தேவைப்படின், “சட்டமன்ற குழுக்கள் அறையில்” 19.06.2025 அன்று நடைபெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நகைக் கடன் நிபந்தனைகள்: தி.மு.க. விவசாய அணி – விவசாய சங்கங்கள் இணைந்து

# ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வேண்டுகோள்!

தஞ்சை, மே 29-

தி.மு.க. விவசாய அணி மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் இணைந்து நடத்தும் கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக விவசாயிகள் - நடுத்தர, சாதாரண மக்கள் மற்றும் வணிகர்களுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக் கடன் நிபந்தனைகளை உடனடியாக கைவிட வலியுறுத்தி நாளை (30.5.2025) தஞ்சாவூர், தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள், தோழர்கள், விவசாயிகள் அனைவரும் அணி திரள தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது வேண்டுகோள் வருமாறு:-

தான் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலே ஒன்றிய பா.ஜ.க. அரசு கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதவான கொள்கைகளையே அமல்படுத்தி, விவசாயிகள் - தொழிலாளர்கள் - ஏழை மக்களை மென்மேலும் பாதிக்கும் கொள்கைகளையே செயல்படுத்தி, சொல்லொணா துயரத்தில் ஆழ்த்தி வருகிறது. தேசிய வங்கிகளில் சாமானிய மக்களுக்கும் விவசாயிகளுக்கு கடன் வழங்காமல், பெரும் நிறுவனங்களுக்கு கடன்களை அள்ளி வழங்கி, பல லட்சம் கோடி ரூபாய் கடன்களை வாராக் கடன் என்று சொல்லி ஒன்றிய பா.ஜ.க. அரசு தள்ளுபடி செய்கிறது. சாமானிய மக்களின் வரிப்பணமான பல லட்சம் கோடி ரூபாய் வரிச் சலுகைகளையும் பணக்காரர்களுக்கு வழங்கி வருகிறது மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு.

விவசாயிகள், ஏழை மக்கள், நடுத்தர மக்கள் தங்களிடம் உள்ள நகைகளை கூட்டுறவு மற்றும் வங்கிகளில் அடமானம் வைத்து விவசாய மற்றும் அவசரத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர். அடகு வைத்த நகையை திருப்ப முடியாத மக்கள் வட்டியை மட்டும் கட்டி மறு அடமானம் வைப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையான இந்திய ரிசர்வ் வங்கி, “இனிமேல் வங்கிகளில் நகை கடன் பெற வேண்டுமெனில் நகை வாங்கிய ரசீது அல்லது தகுந்த ஆவணம் தர வேண்டும், தனியாரிடம் வாங்கிய தங்கக் காசுகளுக்கு கடன் பெற முடியாது, ஏற்கனவே வாங்கி நகை கடனை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே புதிய நகை கடன் வழங்கப்படும், விவசாயிகளுக்கு நகையை புதுப்பித்து மீண்டும் கடன் பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது’’ போன்ற புதிய நிபந்தனைகளை விதித்து விவசாயிகள் - தொழிலாளர்கள் - ஏழை மக்களை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையான இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக் கடன் நிபந்தனைகளை உடனடியாக கைவிட வலியுறுத்தி தி.மு.க. விவசாய அணி மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் இணைந்து வருகிற 30.5.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் தஞ்சாவூர், தலைமை தபால் நிலையம் எதிரில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடத்துகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. விவசாய அணியைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் - கழக விவசாய அணித் தோழர்கள் மற்றும் அனைத்து விவசாய சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.